482

Regd. No. M. 1530

# BALAVINODINI

OR

## THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol IV] SEPTEMBER 1922 [No. 9

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

3C
LL,9(3m11N14
N22·49
186457

...nd Rs. 1—8
...ign Rs. 2—0

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருடசந்தா தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரு. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ரு. 2 0 0 |
| தனி சஞ்சிகை | .. ... விலை | ரு. 0 2 6 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச்சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் கட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி. பி. யில் பெற்றுக்கொள்வதால் அணா மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ... | ரூபா. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ... | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ... | ,, | 3—0—0 |

---

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

பொய்குடத்திற்குச் செப்பிட்ட[illegible] பார்க்கவும் வேண்டுமா?

(270-ம் பக்கம் பார்க்க.)

தமிழ்நாடு [illegible]
18645
சென்னை-600 098

உ
செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

| தொகுதி 4 | 1922ஞு செப்டம்பர்மீ | பகுதி 9 |
| --- | --- | --- |

### ஸ்ரீவாமனாவதாரம்

233-வது பக்கம் தொடர்ச்சி.

இப்படி ஸ்ரீ வாமன மூர்த்தி தேவர்கள் கொண்டாட முனிவர் ரிஷிகள் முதலியோருடைய உள்ளங்களிப்பக் காசியப முனிவரது ஆச்சிரமத்தில் அருங்கலை விநோதராய் அற்புதக் காட்சியராய் இருந்து வருங்காலையில், அசுர மன்னனாகிய மகாபலியானவன் திரிலோகத்திலும் தேவர்கள் முனிவர்களாலும் செய்து முடித்தற்கரிய ஒரு பெரிய யாகத்தைச் செய்து முடிக்க

18645?

எண்ணினன். அந்த யாகத்தில் ஏராளமாக தானஞ்செய்ய வேண்டுமென்பது அவனுடைய விருப்பம். யார் எதைக் கேட்டாலும், எவ்வளவு கேட்டாலும் கொடுப்பது என்று உறுதி செய்து கொண்டான். அவனிடத்திலோ அளப்பரிய செல்வம் இருக்கின்றது. அள்ளி அள்ளித்தந்தாலும் அது குறைந்து போகாது. அதனல் தனக்குப் புண்ணியம் உண்டாகுமென்பது மல்லாமல் பெரும் புகழுங் கிடைக்கு மாகையால், வேத வேதியர் முதல் யாவருக்கும் அவரவர் மனோபீஷ்டத்திற்குக் குறைவில்லாமல் தானஞ் செய்ய முன்வந்து நின்றான்.

மகாபலி சக்கரவர்த்தி பெரிய யாகமொன்றைச் செய்கிறான் என்னும் வதந்தி உலகமெங்கும் பரவியது; அது காசியப முனிவரின் மைந்தராய் வாமன மூர்த்தியாய் விளங்கும் ஸ்ரீமந்நாராயணரின் காதிலும் விழுந்தது. எள்ளினுள் எண்ணெய்போல் பரமாணுக்களிலும் தங்கி வியாபகமாயிருக்கும் எம்பெருமான் அறியாத தொன்றும் உண்டோ! திரிகால ஞானசொரூபியாய் விளங்கா நின்ற பகவானுக்கு மகாபலியின் மகாமகத்தின் (பெரிய யாகம்) மர்மம் அவன் எண்ணுவதற்கு முன்னமே தெரியும்; ஆயினும், தாம் கொண்ட வேஷத்திற்கு ஒற்றுமையாக நடிக்க வேண்டியதே கிரமமாதலால் அந்த யாகம் நடப்பதைப் பிறரால் தெரிந்துகொண்டார்.

ஸ்ரீவாமன மூர்த்தி மகாபலியின் யாகத்தைப் பற்றிக் கேள்வியுற்றதும் தாமும் அவனுடைய யாகசாலைக்குப் போய், தானம் பெறவேண்டுமென்று தாய் தந்தையரிடம் சொல்லி அவர்களுடைய அநுமதிபெற்று வெளிப் புறப்பட்டார். பிரமசாரிக்குரிய சகல லக்ஷணங்களோடு

வேத மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு வழி நடக்க லுற்றார். துளபமாலையும் பூணூலும் சோமனும் துலங்க மகா சுறுசுறுப்போடு உற்சாகங் கொண்டவராய்த் தாண்டித் தாண்டி நடந்து போகையில் இவரது குள்ள வடிவையும் நடையையும் உடையையும் கையிலுள்ளதொரு குடையையுங் கண்டவர்கள் ஆச்சரியப்பட்டு ; அதிசயம் அதிசயம் என்று ஆநந்தமடைந்தார்கள்.

நருமதை யாற்றங்கரையில் ஆதிசேடனாலும் அளவிடமுடியாத ஆடம்பரத்துடன் இருக்கும் யாகசாலையை ஸ்ரீவாமனர் அடைந்தார். அங்குள்ளவர்கள் அவருடைய ஆச்சரியமான உருவத்தைக்கண்டு ஓடோடியும் சென்று தம் எஜமானாகிய மகாபலியிடம் தெரிவித்தார்கள். இதைக் கேட்ட மகாபலி அப்படியா வென்று அரைக்ஷணம் தாமதியாமல் அவரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றான் ; அவரைக்கண்டதும் அவர் வடிவத்தைக் குறித்து அதிக ஆச்சரிய முற்றவனாய் அவருடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துத் தன் இருப்பிடத்துக்கு அழைத்துவந்தான். அங்கு ஓர் அழகிய ஆசனத்தைக் காட்டி அதில் அவரை இருக்கச் செய்து, அவர் முன்னால் கைகட்டி நின்று, அந்த வாமனரை நன்றாக உற்றுப்பார்த்தான். திவ்வியமான தேஜசு பிரகாசித்து நிற்பதை அறிந்து அவரை நோக்கி “ ஸ்வாமி, தங்களைச் சகல நற்குணங்களுக்கும் தாயகம் என்று அடியேன் அறிந்தேன். தங்களது வரவால் நான் மேன்மையடைந்தேன். நான் செய்த புண்ணியத்தின் நற்பலனே இந்தத் திருவுருவம் பெற்றதென நினைக்கின்றேன் என்று மிகவும் பணிவோடு பேசினான்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட ஸ்ரீ பகவான் புன்னகை கொண்டு "சந்தோஷம் : உன் புகழ் இன்றல்ல, தொன்று தொட்டு விளங்குகின்றது. அதைக் கேள்விப்பட்டே உன்னைப் பார்த்துப் போகலாம் என்று வந்தேன். எதைக் கேட்டாலும் எவ்வளவு கேட்டாலும், எப்பொழுது கேட்டாலும் யார்கேட்டாலும் இல்லையென்னாது மனமாரத் தானங்கொடுக்குந் தருமவான் நீயென்பது உலகப் பிரசித்தம். இப்பேர்ப்பட்ட புகழுக்கு அநுசரணையாக நீ யுற்பவித்த குலமும் பெருமையுடையது. ஸ்ரீமந் நாராயணனையே நேரில் தரிசித்த பிரகலாத முனிவர் உன் மூதாதையல்லவா? அன்றியும் உன் புகழைக் கொழுந்துவிட்டெரியச் செய்ய உன் பக்கத்திலே அல்லும் பகலும் அனவரதமும் இருந்து இடைவிடாது ஹிதோபதேசம் செய்துகொண்டிருக்கும் சுக்கிராச்சாரியர் என்ன சாமானியமானவரா? அத்தகைய புண்ணியவான் உனக்கு மந்திரியாகவும் குருவாகவும் இருக்க நீ பாக்கியம் செய்திருக்கின்றாய். நீ இந்தப்படியெல்லாம் பலவழியாலும் பெருங்கீர்த்தி அடைந்திருக்கின்றாய்; ஆதலினால் உன்னிடம் இருந்து தானம் பெறுதல் இகழ்ச்சியாகாது, பெரியதோர் புகழையே தருமென்று நிர்ணயித்து நான் உன்னிடம் வந்தேன்.

(1) 'இரக்க இரத்தக்கார் காணின்' என்றும்.

(2) 'இரத்தலும் ஈதலே போலும்,
கரத்தல் கனவிலும் தேற்றாதார் மாட்டு'

---

(1) வறுமையுடையவர்கள், யாசகர்க்கு இல்லை என்னாது உள்ளதை மனப்பூர்வமான பிரீதியுடன் கொடுக்கவல்ல பிரபுவைக் கண்டால் அவரிடம் சென்று யாசிக்கக் கடவர்.

(2) உள்ளதை ஒளித்துப் பேசும் தன்மையைக் கனவிலும் அறியாதவரிடம் போய் ஒன்றை யாசிப்பதும் (புகழுக் கழிவுதராமைபற்றி) ஈதலுக்குச் சமானமாம்.

என்றும் வேதபுருஷன் கூறவில்லையா? மற்றும்

'ஈவாரும் கொள்வாரும் இல்லாதவானத்து
வாழ்வாரே (1) வன்கணவர்'

எனவும் யாசகரில்லாவிடில் செல்வவந்தரின் சஞ்சாரம் உயிரற்ற சூத்திரப்பதுமையின் இயக்கத்தை யொக்கும் எனவும் பெரியோர் கூறுகின்றனரல்லவா?'' என்றார்.

இவ்வாறு தன்னைப் புகழ்ந்து கூறிய வாமனமூர்த்தியைப் பார்த்து மகாபலி மிக்க சந்தோஷத்துடன் "ஸ்வாமி, எல்லாம் தங்களைப்போன்ற பெரியோர்களின் ஆசீர்வாதம். தாங்கள் எதை விரும்பி இங்கு வந்ததோ? தயைசெய்து சொல்லியருளவேண்டும்'' என்று கேட்டான். ஸ்ரீவாமனர் "நான் வந்ததெல்லாம் சொற்ப பூமியை உத்தேசித்தேயாகும். உனக்குப் பிரியமிருந்தால் நான் தவஞ்செய்துகொண் டிருப்பதற்கு என் காலால் மூன்றடி நிலம் கொடுத்தாற்போதும்'' என்று மறுமொழி பகர்ந்தார். இதைக்கேட்ட மகாபலி மிகவும் அதிசயப்பட்டு "ஸ்வாமி, இதுவென்ன இப்படிக் கேட்கின்றீர்கள்? தவஞ்செய்ய நிலம் என்றாலும் வசதியாய் இருக்கவேண்டாமா? தங்கள் உருவமோ வியக்கத்தக்க வண்ணமாக அவ்வளவு குட்டையாயிருக்கிறது. இந்தச் சித்திரப் பாதத்தால் மூன்றடி மண்ணென்றால் அது அரை அடிக்கு மேல் காணாதே. ஸ்வாமி? நான் லோபியல்லன். எவ்வளவு கேட்டாலும் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறேன்; தாங்கள் யோசியாமல் கேளுங்கள்'' என்றான். இதைக்கேட்ட வாமனர் புன்னகை செய்து "அப்பா, மகாபலி! நீ என்மனதை அறியாது பேசுகின்றாய்

(1) வன்கணவர்—இரக்கமற்றவர்.

நானோ அந்தணன். ஒரு பற்றும் இல்லாதவன். வீணாக எனக்குச்செல்வம் ஏன்? செல்வத்தால் திருப்தியடைந்தவர் எவருமில்லை. அதை நான் உண்மையாகக் கண்டறிந்தும் விரும்புவேனா? ஆகையால் உனக்குத் தயையிருந்தால் நான் கேட்டபடி என் காலால் மூன்றடி நிலத்தைக் கொடுத்து உதவிபுரிவாயாக'' என்றார்.

உடனே மகாபலி "அப்படியே தருகிறேன்'' என்றான். "அப்படிச் சம்மதமாயின் எனக்குத் தாரைவார்த்துக் கொடு'' என்று வாமனர் கேட்டார். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சுக்கிராசாரியார் தமது ஞானசக்தியால் வாமனராய் வந்திருப்பவர் யார் என்று அறிந்து ஏது இனி மோசம் வந்துவிடுமென்று பயந்து தன் சீடனை மகாபலியை அப்புறம் அழைத்துச் சென்று "மகாபலி, இப்பொழுது உன்னிடத்தில் தக்ஷிணைபெற வந்திருப்பவர் யார் தெரியுமோ? அவர் ஸ்ரீமகாவிஷ்ணு. தேவர்களது வேண்டுகோளுக்கிணங்கி உன்னிடமிருக்கும் சகல ஐசுவரியத்தையும் பிடுங்கிக்கொள்ள இந்த வேஷத்துடன் வந்திருக்கிறார், ஆகவே நீ அவருடைய கபடத்திற்கு இணங்கி, சங்கடத்தை வருவித்துக்கொள்ளாதே. தனக்குமிஞ்சித் தானமேயல்லாமல் தன்னைக் கெடுத்துக்கொள்ள ஒருவரும் தானஞ் செய்யமாட்டார்கள்; ஆகையால் நீ இந்த வாமனர் கேட்ட வண்ணம் அவர் காலால் மூன்றடி நிலத்தைத் தர ஏதேனும் சாக்குப்போக்குரைத்து மறுத்துவிடு'' என்று தடுத்தனர். இதைக்கேட்ட மகாபலி "குருமகராஜ், தாங்கள் இதுவரையிலும் என்னை நல்வழியில் நடக்கும்படி எத்தனையோ விதமாகப் புத்திபுகட்டி வந்தீரே; இன்றைக்

கென்ன இவ்வாறுசொல்ல ஆரம்பித்துவிட்டீர்? தங்கள் மேலான ஞானத்திற்கு இது பொருந்துமா? எது வந்தாலும் வரட்டும். நான் வாக்குத் தவறமாட்டேன். மேலும் நான் கொடுக்கும் தானத்தை ஏற்பவர் சாமானியரல்லர் என்று நீரே சொல்லுகிறீர். என் மனதிலும் வாக்கிலும் செய்கையிலும் சிறப்பாக நிறைந்தவரான ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குத்தானே என் சகல சுதந்தரமும் போய்ச்சேரும். நானே அவருக்கு அடிமை. ஆகவே என் பொருளும் பூஸ்திதியும் இன்னு மற்ற எல்லாச் செல்வமும் அவருடையதேயாகும். ஆகையினுல் நான் இப்பொழுது கொடுக்குந்தானம் மிகவும் கௌரவமுடையது. அந்தத் தானத்தை வழங்கப்புகும் எனக்கும் பெருமையே சித்திக்கும். தாங்கள் கிலேசப்படவேண்டாம்'' என்றுன். வரப்போகிறதை அறியாமற் பேசுகிற தம் சிஷ்யனை மகாபலியின் பேதைமைக் கிரங்கி சுக்கிராசாரியானவர் "நான் சொல்லுவதைத் தட்டாதே. நீ செய்யப்போகுங் காரியம் யானை தன் தலைமேலே தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளுவதுபோல முடியும். வேண்டாம். என் வார்த்தையைக்கேள்'' என்றுர்.

அப்போது மகாபலி, சுக்கிராசாரியை உற்று நோக்கி 'ஏற்பது இகழ்ச்சி' என்றறிந்தும் வந்து யாசிப்பவர்க்கு நான் 'இல்லை' என்றுல் பிறகு என் பெருமையும் ஆண்மையும் என்னும்?

'உடைந்தவர்க் குதவானுயின்
உள்ளதோன் றீயானுயின்
அடைந்தவர்க் கருளானுயின்
அறம் என்னும் ஆண்மை என்னும்'

என்னும் ஆன்றோர் வாக்கியம் என் இருதயத்தில் பசுமரத் தாணிபோல் வேரூன்றியிருக்கின்றதே. நீர் இது விஷய மாகக் கவலைப்படவேண்டாம்'' என்றான். குருவானவர் அவன் சொல்லைப் பொருட்படுத்தாது பிடிவாதமாய் அவனை விலக்கினார். இந்தச் செய்கை மகாபலிக்குக் கோபத்தையுண்டுபண்ணிற்று. உடனே அவன், குரு வைப்பார்த்து, கோபமாய்

'' வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன் உயிரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்—ஆதலால்,

' எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்பே
தடுப்பது நினக்கழகிதோ ? தகைவில் வெள்ளி !
கொடுப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடுகின்றாய்.''

என்று கண்டித்துத் தான் வாக்குத் தவறுவதில்லையென்று வாமனர் கேட்டுக்கொண்டவண்ணம் மூவடி நிலத்தைத் தாரை வார்த்துக்கொடுக்கத் தன் மனைவியாகிய விந்தியா வலி என்பவளை அழைத்துக்கொண்டு வந்து வாமனரை நோக்கி ''ஸ்வாமி தாங்கள் கோரியவண்ணம் தமது பாதத்தாலேயே மூவடி நிலத்தை அளந்து எடுத்துக் கொள்ளலாம்'' என்று சொல்லி வாமனரது அழகிய அற்புத கற்பனைச் சிறுவடியில் மலர்களைத்தூவி அருச்சித்து தாரைவார்த்துக்கொடுக்க ஆரம்பித்தான்.

சுக்கிராசாரியார் எல்லா வித்தையிலும் வல்லவர் ; தாம் விரும்பிய வடிவத்தை எடுத்துக்கொள்ள சக்திவாய்ந்தவர். தமது சொல்லைத் தட்டித் தாரைவார்க்க மகா

பலி துணிந்ததைக்கண்டு மனம் பொறுமல் அவனைக் காத்தருளவேண்டுமென்ற ஆசையால் ஒரு சிறு வண்டின் வடிவத்தோடு ஜலபாத்திரத்தில் நுழைந்து நீர்த்துவாரத்தை அடைத்தார். தாரைவார்க்கும் நீரை ஏந்திக் கொள்ளக் கையை நீட்டிய சித்திரக்குள்ளர் தமது கையில் நீர் விழாததைக்கண்டு உண்மை தெரிந்து தமது பவித்திரத்தின் நுனியால் பாத்திரத்தின் துவாரத்தைக் குத்தினார். அந்தத் தருப்பைப் புல் சுக்கிராசாரியின் ஒரு கண்ணிற்பட்டு அதைக் கெடுக்கவே நோய் பொறுக்காமல் அவர் விலகிவிட்டார். பின்பு வாமனர் கரத்தில் ஜலம் தாரையாய் விழுந்தது. ஜலமானது வாமனர்கையில் விழவே அவர் தமது குள்ளரூபத்தை விட்டு விட்டு அண்டையிலுள்ளோர் கண்டு கலங்கும்வண்ணம் ஆகாய மார்க்கமாக உயர்ந்து வளர்ந்துவிட்டார். இந்த பிரமாண்டமான உருவம் அளவிடமுடியாதபடி பூலோகமுழுதும் நிறைந்து அதற்கப்பாலும் நீண்டிருந்தது. ஒருபாதம் அப்படியே அகன்று பரந்து நீண்டு மேலுலகத்தை மூடியது. பகவான் தமது இரண்டடியாலும் பூலோகத்தையும் மேலோகத்தையும் அடக்கிக்கொண்டமையால் மூன்றுவது அடிக்கு இடமில்லை. பகவான் மகாபலியைப் பார்த்து “இரண்டடிக்கு இடம் கிடைத்தது. மற்றோரடிக்கு இடங்காட்டு. நீ உன் வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன். இல்லையென்றால் நீ நரகஞ்சேர்வாய்” என்றார். அதற்கு மகாபலி “ஸ்வாமி தமது மூன்றுவதடிக்கு இடமாக வேறொன்றுமில்லை. அடியேனுடைய முடிதான் இருக்கிறது” என்றான். உடனே பகவான் மாவலியின் சிரசில் தமது பாதத்தை வைத்து அவனைப் பாதா

ளத்தில் சேர்த்துவிட்டார். தேவர்கள் பூமாரி பொழிந்து பேரானந்தமடைந்தார்கள்.

மகாபலி தமது பக்தனானதாலும் தமது பாதம் பட்டதினாலேயே பரிசுத்தனானதாலும் அவனை மகா விஷ்ணு அபிமானித்துச் சிரஞ்சீவியாய்ப் பாதாளத்தில் அரசுபுரியும்படி செய்தார்.

தேவேந்திரனும் தேவலோகத்தைப் பெற்று யாதொரு பயமுமில்லாமல் ஆட்சி புரியலாயினான். பக்தருக்கிரங்கும் பரமதயாநிதியாகிய மகாவிஷ்ணு தமது காரியம் முடிந்ததும் எப்போதும்போலச் சகலலோகமும் வாயாரவாழ்த்திப் புகழத் தமது சக்தியாகிய இலட்சுமி தேவியோடு திருப்பாற்கடலுக்கெழுந்தருளி ஆதிசேஷன் என்னும் ஸர்ப்பராஜன்மீது பள்ளிகொண்டருளினார்.

---

## ஹாஸ்யம்.

**கல்யாணம் :**—அடே கோபாலா நீ ஏனடா கல்யாணம் பண்ணிக்கொள்ளமாட்டேனென்கிறாய்?

**கோபாலன் :**—நான் எண்ணுகிறபடி ஒரு பெண்ணும் கிடைக்கவில்லை; அதனால்.

**கல்யாணம் :**—உன் எண்ணமென்ன?

**கோபாலன் :**—பெண் நல்லரூபவதியாயும் பணக்காரர் வீட்டுப் பெண்ணாயுமிருக்கவேண்டும். ஆனால் அறிவில்லாதவளாயிருக்கவேண்டும்.

**கல்யாணம் :**—(நகைத்து) ஏன் அறிவில்லாதவளாயிருக்க வேண்டுமென்கிறாய்? அதிலென்ன சாதகமுனக்கு?

**கோபாலன் :**—நல்ல ரூபவதியாயும் பணக்காரியாயுமில்லாமற்போனால் நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதில்லை. அறிவில்லாதவளாயிருந்தாலொழிய என்னை அப்பெண் கல்யாணம் பண்ணிக்கொள்ள சம்மதிக்கமாட்டாள்.

**கல்யாணம் :**—பேஷ்! நல்ல நிபந்தனை!

# அகங்காரம்.

பூபாரந்தீர்க்க வந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் துவாரகாபுரியில் சௌக்கியமாயிருக்கும் போது, ஒருநாள் தமது தமையனாரான பலராம மூர்த்தியைப் பார்த்துவர அவருடைய திருமாளிகைக்குச் சென்றார். அப்போது பலராமர் தமது புஜங்களைப் பலசாலிகளான பலர் இருபுறத்திலுமிருந்து கொண்டு பிடிக்க ஆனந்தமாயுட்கார்ந்திருந்தார். கிருஷ்ண மூர்த்தியைக் கண்டதும் அவர், "அடா! தம்பி! இங்கே பார்; எத்தனை வீரர் என் புஜங்களைப் பிடித்து எனது ஆயாசத்தை நீக்குகிறார்கள். இத்தனை பேர் பிடித்தும் என் புஜங்கள் அவர்கள் வீரத்தன்மைக்கு இளகவில்லை. என்னிலும் பலம் வாய்ந்த வீரர் உலகத்தில் இருப்பார்களென்று எனக்கு நம்பகப்படவில்லை. இந்த விஷயமாக நீயறிந்தவரையில் பாரபக்ஷமின்றி உனக்குத் திடப்படும் அபிப்பிராயம் யாதோ அதை ஒளியாமற் சொல், பார்ப்போம்" என்றார்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் யோசிப்பவர்போல் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். தமக்குள் "இவரென்ன இப்படி வினவுகிறார்! உலகில் ஜீவர்கள் இவ்வாறு மயங்குவது இயல்பே. எந்த உயிருந் தன்னை எந்த விஷயத்

திலும் தாழ்த்திப் பேசுகிறதில்லை. மகாத்துமாக்களே சமயா சமயங்களில் ஏமாந்து பேச உடன்படுகிறார்கள்; அப்படியானால் பிறரைப்பற்றி வாதிக்கவும் வேண்டுமோ? சரி; இருக்கட்டும். அகங்காரம் மாறுவது வெகு நேரமா?" என்று நினைத்தவராய் அண்ணாவை நோக்கி, "அண்ணா! பலத்தில் தங்களுக்கு நிகரானவர்களும், பூவுலகத்தில் மட்டும் அல்ல, வானுலகத்திலுந்தான் வேறொருவர் இருப்பார்களென்று நான் துணிந்து சொல்லக்கூட வில்லை. கைப் புண்ணுக்குக் கண்ணாடியுந் தேவையா? தங்களுக்கேன் இந்தச் சந்தேகம் இப்போது வந்தது? நான் உபசாரமாகச் சொல்வதாக எண்ணவேண்டாம். இப்படி உபசார வார்த்தைகள் வழங்குவது உலகத்திற்கு இயல்பாயிருந்தாலும் அப்படி நான் தங்கள் விஷயத்தில் வெளியிட யாது காரணம்? தங்களைப் பலத்தில் ஒப்பவர் கிடையவே கிடையாது. தங்கள் பேரைக் கேட்டமாத்திரத்தில் சகல வுயிருந் தாளம்போட வேண்டாவா? அந்த விசாரத்தை அடியோடு மறந்துவிடுங்கள்" என்று மறுமொழி கூறித்தமது அரண்மனைக்குத் திரும்பி விட்டார்.

அரண்மனைக் காவல் புரிந்திருந்த கருடபகவான், எஜமானர் வருவதையும் பெருமைப் படுத்தாது "நாமும் ஓரரசராயிருந்தும், மற்றோரரசன்கீழ்க் குற்றேவல் செய்து வருகின்றோமல்லவா? நமது பலத்தைப் பற்றியே நம் பேரால் ஒரு புத்தகம் உலகில் நடையாடிக்கொண்டு வருகிறது. இது ஒன்றே நமது வல்லமையை நிரூபிக்கப் போதுமான சாக்ஷி. கொட்டினால்தானே தேள்—கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி. ஆகவே நமது பராக்கிரமம் போச்சு. இரண்டொரு தடைவையாவது நமது எஜ

மானுக்கு நம்முடைய வீரத்வம் இத்தன்மையது என்று காட்டி வைக்கவேண்டும். காட்டா விட்டால் கிள்ளுக் கீரையாக வன்றோ மதித்து விடுவார்கள். இனி சமயம் நேர்ந்தபோது ஒருமுறையாவது காட்டித்தீரவேண்டும்'' என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார். எஜமானர் அருகில் வந்தும் எழுந்திராமலும், வாய்பொத்திக் கைகூப்பி நில்லாமலும், எதையோ சிந்தித்துக்கொண்டு அயர்ந்திருப்பவர்போல் உட்கார்ந்தபடியே இருந்தார்.

இதைக்கண்ட ஸ்ரீகிருஷ்ண பகவான் "இன்று நமக்கு விபரீதக் காட்சியே கிடைத்து வருகிறது. அண்ணன் தன்னை எண்ணுமலே குதிக்கிறுன்; பணியாள் நம்மைப் பைத்தியம் பிடித்தவனென்று மதிக்கிறுன். வேடிக்கைதான்'' என்று நினைத்தவண்ணம் அரண்மனையை யடைந்து சத்தியபாமையின் அந்தப்புரத்திற்குப் போனுர். அப்போது சத்தியபாமை தன்னை விலையேறப் பெற்ற ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு நிலைக் கண்ணுடியில் தனது பேரழகைக்கண்டபடியே "நாம் இவ்வளவு அழகோடுகூடி யிருத்தவினுற்ருன் பகவான் நம்மிடத்திலேயே குடிகொண்டிருக்கிறுர். இதைத் தெரிந்து கொள்ளாமல் ருக்குமிணி முதலிய தேவிமார்கள் கூத்தாடுகிறுர்கள். ஆடட்டுமே—இப்போது நம்மிடங் கட்டுப்பட்டுள்ள பகவான் இனி அவர்களை நாடிச் சென்றபோதுதானே அவர்களுடைய கொண்டாட்டஞ் செல்லும். இன்றேல் அது செல்லாக்காசுதான். நாம் இப்படியெல்லாம் நம்மை அலங்கரித்துக்கொண்டு நமது அழகைப் பிரகாசப் படுத்துவதால் அதில் நமது நாயகன் மயங்கிப் போயிருக்கிறுர். இது என்னமோ சத்தியம் என்று என்

புத்தியில்படுகிறது. இதைக்குறித்து அவரையே கேட்டுப் பார்த்தால் உண்மை வெளிவந்து விடும். அவருக்குப் பட்டமகிஷிகள் எட்டுப்பேரல்லவா? அவர்களுள் நாமு மொருத்தி. இந்த எண்மரில் நம்மை எப்படி மதித்திருக் கிறாரென்பது அவர் வாயைக்கொண்டே பகிரங்கமாவது விசேஷந்தானே" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந் தாள்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் அந்த வேளையில் திடும்பிர வேசமா யுள்ளே வரக்கண்டு அம்மாதரசி சந்தோஷங் கொண்டு, "நாதா! வரவேண்டும், வரவேண்டும். தங் களைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன்" என்றாள்.

அதுகேட்டுப் பகவான் "பெண்கள் நாயகமே! என்ன விசேஷம்? என்றுமில்லாத அலங்காரம் இன்று கொள்ளக் காரண மேதேனு மிருக்கவேண்டு மென்று தோன்றுகிறது. அழகுக் கழகு செய்வாரை யான் இது வரையில் கண்டதில்லை. நான் முகஸ்துதி செய்வதாக எண்ணவேண்டாம். உண்மையிலேயே நீ சௌந்தரவதி. சௌந்தரத்தில் உன்னை வெல்பவர் ஒருவருமிலர். அங்ஙன மிருக்கப் பொற்குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்க்கவும் வேண்டுமோ?" என்றார்.

இந்த இனிமையான வார்த்தைகளைக் கேட்டதும் சத்தியபாமைக்கு ஒருபுஜம் இருபுஜமாகப் பூரித்தது. "நாம் நினைத்தது சரியாகவே முடிந்தது. நாம் வாய் விட்டுக் கேட்பதற்கு முன்னரே பகவான் நம்மைப் புகழத் தொடங்கி விட்டார். நமது அழகு அவரை மயக்குமானால் அதற்கு நாமென்ன செய்யலாம். ஆகிலும் ஒரு பேச்சு அவரையே கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன்" என்று

தனக்குள் தீர்மானங்கொண்டு பகவானை நோக்கி "பிராணேசா! ஒன்றுமில்லை. அழகில் அடியேன் எவ்வாறிருக்கிறேன் என்கிற சந்தேகம் தற்செயலாய் எனக்குண்டாயிற்று. அதனால் நிலைக்கண்ணாடியிடஞ் சென்றேன். அது என் சந்தேகத்தை ஒருவாறு நீக்கியபோதிலும், பல ஸ்திரீரத்னங்களைப் பார்த்துள்ள தங்களைக் கேட்டு மனச்சமாதானத்தை அடையலாமென்றெண்ணித் தங்கள் வரவைக் கோரியிருந்தேன். தாங்களும் வந்து விட்டீர்கள்" என்றாள்.

ஸ்ரீகிருஷ்ண பகவான் புன்னகைகொண்டு பிரபஞ்சத்தின் சுபாவம் இப்படியிருக்கின்றதென்றெண்ணி, அந்த நாயகியை நோக்கி "அடி! பெண்ணரசி! உனக்கும் உன் அழகில் ஒரு சந்தேகம் உண்டாக வேண்டுமா? அதை நிலைக்கண்ணாடி எப்படி தீர்க்கும்? உள்ளதை உள்ளபடியே காட்டக்கூடிய அவ்வளவு சுத்தமான கண்ணாடி யுலகத்தில் அகப்படுவதரிது. ஏதேனும் கிஞ்சிற்றுத்தோஷம் அதனிடத்தில் இருந்தேதீரும். வாஸ்தவத்தில் உன் அழகுக்குப் பழுதேகிடையாது. இருந்தால் நான் உன்னிடமேன் கட்டுப்பட்டிருக்கிறேன். இதுவே உனக்குப் பெரிய அத்தாட்சியல்லவா? நல்லது நானொருவேலையாய் வெளியே போகவேண்டும். பிறகு வருகிறேன்" என்று சொல்லித்தமது அறைக்குத்திரும்பி விட்டார்.

திரும்பியதும் இம்மூவருடைய அகங்காரத்தையும் ஒழிக்கவேண்டுமென்று நாரதரை நினைத்தார்.

(இன்னும் வரும்.)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேச்வரன் பேட்டை, சென்னை.

# பெருந்தகைமையே பெருமை தருவதாம்.

விஜயபுரம் என்கிற நகரத்தில் விரோசனன், விஜயாங்கன், ஜயபாலன் என்கிற மூன்று வாலிபர்கள் சித்திரக் கலாசாலையில் சித்திரவேலை பயின்று வந்தனர். அவர்களில் விஜயாங்கன் ஒருநாள் ஒரு படம் எழுதி அதற்கு அழகிய வர்ணங்கள் கொடுத்து முடித்தான். அதைப்பார்த்த உபாத்திமார்களும் சித்திர வேலை நிபுணர்களும் ஆச்சரியப்பட்டு "இதை எழுதிய வாலிபன் இப்படியே ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும் உழைத்து வருவானானால் எல்லோரும் பார்த்துப் புகழும்படியான சிறந்தவித்வானாகிக் கீர்த்தி பெருக விளங்குவான்" என்று வியந்து பேசி விஜயாங்கனுக்கு நீண்ட ஆயுளும், ஈசுவராநுக்கிரகமும் உண்டாகும்படி ஆசீர்வதித்தனர்.

இப்படி இவர்கள் விஜயாங்கனைப்புகழவே அவனுடன் கல்விபயின்று வரும் விரோசனன் அந்தப் புகழ்ச்சியைப் பொறுக்காமல் அவனிடம் பொறாமைகொண்டு "நாமும் எவ்வளவோ படங்கள் எழுதியிருக்கிறோம். கெட்டிக்காரனென்று பெயரும் வாங்கியிருக்கிறோம். இருந்தாலும் இப்படி நம்மை இதுவரையில் ஒருவரும் புகழவில்லையே! ஆசீர்வதிக்கவுமில்லையே. இந்தப்பயல்—நம்மிடம் வேலை கற்றுக்கொண்டிருந்தபயல்—இவ்வளவு

தூரம் எல்லாராலும் புகழப்படுவதென்றால் என் சிரமமும் பயிற்சியும் என்னும். என்னை எப்படி உலகம் மதிக்கும்? இவனே என்னை இகழமாட்டானா? ஆகவே இவனை ஓங்க விடாமல் தடுத்தால்தான் நாம் புகழ் பெறலாம். இதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்தே தீரவேண்டும்" என்று தீர்மானித்தான். தீர்மானித்த மனமும் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. உடனே விரோசனன் விஜயரங் கனைப்புகழ்ந்த பெரியோர்களிடம் சென்று "ஐயன்மீர், நீங்கள் இப்படி வியந்துபேசும் இவ்வேலை விஜயரங்கன் மாத்திரம் செய்ததல்ல; உபாத்தியாயர்களுடைய உதவி யும் கலந்திருக்கிறது. ஆகையால் விஜயரங்கன் தங்க ளுடைய புகழ்ச்சிக்குப் பாத்திரமாகான். நாங்களும் அதே பள்ளிக்கூடத்திலே தான் பயின்று வருகிறோம். நாங்கள் அப்படி எழுதமாட்டோமா? அவன் எழுதிய தாகக்கொண்டு அவனைப் புகழ்ந்தது தவறாகும். அது எங்களைப்போ லொத்தவர்களுக்கு மிகவும் அவமானந் தருவதாகும்" என்றான்.

நிபுணர்கள்:—ஆகா! அப்படியா! நீயும் நன்றாய் எழுதுவாய் என்று கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். நீங்களும் கெட்டிக்காரரானால் உங்களுடைய புகழ் நாடெங் கும் பரவும். உங்களால் நம் சமூகத்திற்கே பெருங்கீர்த்தி யுண்டாகும். உங்கள் எல்லோருடைய திறமையையும் காண ஒரு நாள் ஒரு பரீக்ஷை வைப்போம். அதில் யாரு டையது நன்றாயிருக்கிறதோ அவனுக்குப் பரிசும் அளிப் போம். நீயும் அப்போது ஒருபடம் எழுதிக்கொண்டுவா. உன்னுடையது நன்றாயிருந்தால் உன்னைப்புகழ்ந்து உனக் கே பரிசும் அளிக்கிறோம். நீ இங்கு பேசியதுபோல் உன்

வேலையிலேயும் உன் திறத்தைக்காட்டிப் பரிசுபெறுவாயாக" என்று சொல்லி அவனையனுப்பினார்கள்.

ஜயபாலன் மகாபுத்திமான். சிறுபிள்ளை ஆயினும் தான் முன்னேற்ற மடையவேண்டு மென்கிற அவா அவனுக்கு அதிக முண்டு. யார் யார் எங்கெந்தச் சமயங்களில் எப்படி எப்படி வேலை செய்து தத்தம் புகழை நாட்டியிருக்கிறார்கள் என்று அவரவர்களுடைய சரித்திரங்களைப்படித்து அவர்களைப்போல் தானும் புகழடையப் பேரவாக்கொண்டு தன்னால் இயன்றவாறு தான் படித்தவைகளில் விசேஷமான குணங்களைத் தன் அநுபவத்திற்குக்கொண்டுவர முயற்சி செய்துவருவான். இவனுக்கு விஜயரங்கனிடம் விசேஷ மதிப்புண்டு. விஜயரங்கன் அதிமேதாவியாவான் என்பது இவன் கருத்து. இவன் அநேக பெரியோர்களுடைய சரித்திரங்களைப் படித்துப் பெரியோர்களுடைய இலக்ஷணங்களையும் அறிந்துள்ளானகையால் தான் படித்தபடி விஜயரங்கனிடம் பெரியாரின் இலக்ஷணங்கள் அநேக மமைந்திருப்பதினாலும், அவன் வேலையில் அதி சாமர்த்தியசாலியா யிருப்பதினாலும் அவனை எல்லோரும் புகழுகிறபடியாலும் அவன் நல்ல நிலைமைக்கு வருவானென்பது இவன் தீர்மானம். ஆகவே அவனைவிட மேலான நிலைமைக்கு இவன் வராவிட்டாலும் அவனளவாவது ஆகவேண்டுமென்று அவனைப் பின்பற்றியே வேலைசெய்துவந்தான். இவன் இப்படி மதித்து வந்த விஜயரங்கனை நிபுணர்கள் புகழக்கேட்ட ஜயபாலன் சந்தோஷமடைவான்.

புத்திசாலிகள் ஒரு வேலையை "எண்ணித்துணிக கருமம்" என்பதற்கேற்ப, தீரயோசித்துத் தொடங்குவார்

கள். தொடங்கியபின் விழிப்பது "துணிந்தபின் எண்ணு வமென்பதிழுக்கு" என்னுங் கதையாய்முடியும்: துணிவு பூண்டவர்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

என்கிறபடி எடுத்த காரியத்தை முடிப்பதிலேயே கண் ணுங் கருத்துமாயிருப்பர். நமது ஜயபாலனும் புத்திசாலி யாகையால் விளையாட்டுக்குரிய காலத்தையும் மதிக்காமல் தான் மேற்கொண்ட காரியத்திலேயே கவனஞ் செலுத்த லானான்.

கோகுல அஷ்டமியன்று பரீக்ஷை நடத்துவதாகக் குறிக்கப்பட்டது. அப்போது எல்லோரும் ஆண்டவ னைத் தரிசிக்குமாறு ஸ்ரீ கிருஷ்ணபகவான் க்ஷீராப்தியில் அவதரிக்கிறமாதிரியாக ஒரு படம் வரையவேண்டுமென் றும் அதில் யாருடையது நன்றாயிருக்கிறதோ அவருக்குப் பரிசளிக்கப்படுமென்றும் அறிக்கை வெளியிடப்பட்டது.

இவ்வறிக்கை வெளியானதைக் கேட்டதும் விஜய ரங்கன் சுத்தவீரர்கள் யுத்தம் என்கிற செய்தி கேட்ட தும் எப்படி சந்தோஷப்படுவார்களோ அப்படி உள்ளம் பூரித்தவனானான். அல்லாமலும் அவர்களுடைய புய வலிமையைக் காட்ட "யுத்தரங்கத்திற்கு எப்போது போவோம், போய் நமது கீர்த்தியை நிலைநாட்டுவோம்" என்று யுத்தஸந்நத்தராவதுபோல் நமது விஜயரங்கனும் வெகு பரபரப்புடனும், ஆவலுடனும் படத்தை எழுத

தமிழ்நாடு ... நூலகம்
18645

ஆரம்பித்துக் குறித்தநாளை எதிர்பார்த்துக்கொண்டே வந்தான்.

விரோசனனும் கெட்டிக்காரன் தான்; சாமர்த்தியமாய் எழுதக்கூடியவனே. முயன்றால் விஜயரங்கனையும் வெல்லக் கூடும். ஆனால் இப்போது எப்படியிருக்கிறான்? பொறாமைப் பேய்பிடித்து மனவேற்றுமையுடன் தன்வச மற்றவனா யல்லவா இருக்கிறான். இவன் மனம் ஒருமைப்பட்டு தீக்ஷண்யத்துடன் படமெழுத எப்படிச் செல்லும்? விஜயரங்கன் புகழைக் குலைப்பதிலேயே யல்லவா ஒரே நாட்டமாக நாடியிருக்கிறது.

'மகன் செத்தாலும் சாகட்டும்
மருமகள் தாலியறுத்தால் போதும்' என்பது

போல் தனக்குப் பரிசுகிடைக்கா விட்டாலும் போகிறது, விஜயரங்கத்தின் புகழ் ஓங்கக்கூடாது என்பது இவன் தீர்மானம்.

பரீக்ஷை நாள் குறிக்கப்பட்ட செய்தி விரோசனன் செவிக்கெட்டியதும் முதலில் பரீக்ஷைக்குப் போவதா வேண்டாமா என்று திகைத்தான். விஜயரங்கன் ஜயித்து விட்டால் தனக்குப்பெரிய அவமானம் வந்து நேரிடுமே என்று யோசித்தான். பரீக்ஷைக்குப்போகாமலிருந்தாலோ பயங்காளி என்று ஏசுவார்களே என்று பயந்தான்; கடைசியில் போயே தீருவது என்று தீர்மானித்தான்; ஆனால் விஜயரங்கனைமாத்திரம் ஜயம்பெற விடாமல் சூழ்ச்சி செய்ய வேண்டுமென்று திடங்கொண்டான்; "சூழ்ச்சியினால் அவனுடைய படத்தைக் கெடுத்துவிட்டால் நம்மை வெல்லுகிறவர்கள் ஒருவருமில்லை, பரிசும் நம்முடையது தான். கீர்த்தியும் நம்முடையதுதான். விஜயரங்கப்பயல்

ஒழிந்தான், இது நிச்சயம். இவன் கொக்கரிப்பை எல்லாம் ஒழித்துவிடுகிறேன்" என்று மனோராஜ்யம் செய்து கொண்டு தானும் படம் வரைய ஆரம்பித்தான்.

மூன்றாமவனாகிய ஜயபாலனோ பரீக்ஷை என்று கேள்விப்பட்டவுடனே மட்டுக்கடங்கா மகிழ்வடைந்து "விஜயரங்கன் பரிசுபெறுவது நிச்சயம். அவன் பெற வேண்டியதும் அவசியமே. அவன் அதிகப் பிரயாசைப்பட்டு உழைத்துவருகிறான். 'உழைப்பவன் பங்கே ஊதியம் தங்கும்' என்பது பழமொழியல்லவா? தவிர (Dr. Arnold) டாக்டர் ஆர்நால்ட் என்னும் ஆங்கில மேதாவி "யார் உள்ளபடியே மெய்வருந்த உழைத்து அறிவையபிவிருத்தி செய்துகொள்ளுகிறார்களோ அவர்களுக்கு நான் மனப்பூர்வமான வந்தனமளிப்பேன்" என்று சொல்லியிருக்கிறதை நாம் படித்திருக்கிறோமே. அப்பேர்க்கொத்த உழைப்பாளியல்லவா விஜயரங்கன்? நாம் என்ன உழைத்தபோதிலும் அவனுக்குச் சமானமாவது கஷ்டம். ஆகவே அவனுக்கு முதல் பரிசு கிடைத்தபோதிலும் நமக்கு இரண்டாவது பரிசாவது கிடைக்கும்படி படத்தை எழுதி முடிக்கவேண்டும். பொறாமைக்காரப் பயல் விரோசனனுக்குமாத்திரம் இடம் கொடுக்கக் கூடாது" என்று தீர்மானித்துப் படத்தை எழுதலானான்.

இப்படியாக மூவரும் எழுதிக்கொண்டிருக்கும் போது பரிசுக்குரிய நாள் சமீபித்தது. விரோசனன், விஜயரங்கன் எழுதுவது அதியற்புதமாயிருந்து வருவது கண்டு பொறாமையினால் வயிறுப்பலானான். ஜயபாலனோ விஜயரங்கன் படம் கண்டோர் கண்ணைக் கவரும்படியா

யமைவது கண்டு முதல்பரிசு அவனுக்குத்தான் கிடைக்கு மென்று சந்தோஷமடைந்தான்.

குறித்தநாளுக்கு முதல்நாளே பரீக்ஷைக்கூடத் திற்குப் படங்கள் எல்லாம் அனுப்பப்பட்டன. இம்மூவர் களுடைய படங்களும் தவிர இன்னும் அநேகருடைய படங்களும் வந்திருக்கின்றன. எல்லாம் வரிசையாக வைக் கப்பட்டிருக்கின்றன.

இப்போது விரோசனன் நடுநிசியில் எழுந்து பரீ க்ஷைக் கூடத்திற்குச் சென்று காவலாளியைச் சரிப்படுத் திக்கொண்டு உள்ளேபோய் விஜயரங்கன் படத்தின் மேல் இங்குமங்கும் வர்ணத்தை வாரித்தெளித்தும் தட வியும் அதன் அந்தத்தைக் கெடுத்துவிட்டான்.

மறுநாள் பரீக்ஷகர்கள் விஜயரங்கன் படத்தின மேலேயே கண்ணுகச் சென்று பார்த்தார்கள். படங் கெடுக்கப்பட்டிருப்பது கண்டு வருத்தப்பட்டார்கள். விஜ யரங்கன் உயிரற்றவனுய் "இது யாரோ செய்த பழியா யிருக்கிறதே. நேற்று நான் இங்கு கொண்டுவந்து வைக் கிறவரையில் நன்ருயிருந்ததே. இது யாரோ பொருமை யினுல் செய்த விபரீதமாயிருக்கிறதே. நான் பட்ட சிரமம் எல்லாம் வீணுயிற்றே. எந்தச் சண்டாளனே என்னே அவமானப்படுத்தவேண்டுமென்று இப்படிச் செய்திருக் கிறுன்" என்று பரீக்ஷகர்களிடம் சொன்னுன். அவர்கள் இச்சமயத்தில் என்னசெய்வார்கள்? "ஆமாம் யாரோ கெட் ட எண்ணங்கொண்டு செய்த செய்கையாகத்தா னிருக்க வேண்டு" மென்று சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டே மேலே மற்ற படங்களேப்பார்க்கச் சென்ருர்கள். ஜயபால னும் அதிக துக்கத்திலாழ்ந்தவனுய் இன்னது செய்வ

தென்று தோன்றுமல் விஜயரங்கனிடம் வந்து அநியாய மாய் இப்படி நேர்ந்துவிட்டதே இது தெய்வசம்மதமா குமா? என்று சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருந் தான்.

விரோசனனே விஜயரங்கன் வருத்தப்படுவதைத் தூரத்திலிருந்து பார்த்து "ஒழிந்தான் பயல்—கொட்டம் அடங்கியது. இனி நமக்குத்தான் பரிசு" என்று புன் சிரிப்புடன் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தான்.

எல்லாவற்றையும் அந்தரியாமியாயிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் தெய்வத்திற்கு இவன் செய்தது சம்மத மாகுமா! பகவானுடைய படத்தின் வெளித்தோற்றத் தைக் கெடுத்தானே ஒழிய அவருடைய உள்ளத்தையும் நியாயத்தின் வலியையும் யாரால் கெடுக்கமுடியும்? கம்ஸன் வசுதேவருடைய குழந்தைகள் எல்லாவற்றையும் கொன்று விட்டால் தான் தப்பிவிடலாமென்று ஒவ்வொன்ருகக் கொன்றுகொண்டே வந்தபோதிலும் எட்டாவது பிள்ளை யான ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவன் வதைக்குத் தப்பி இறு மாப்புடன் கூடவிருந்த கம்ஸனையே கொல்லவில்லையா? அந்த பகவான்தானே இப்போது இங்கு விரோசனனுல் உருமாறுபட்டிருக்கிருர். அவருக்குத் தெரியாதா இன் னது செய்ய வேண்டுமென்று?

உலகத்தில் தெய்வ சம்மதப்படி எதுவும் நடக்கு மென்பதைச் சில துராத்மாக்கள் உணராமல் எல்லாம் தங்களாலேயே நடக்கிறதென்றும், தாங்கள் நினைத்ததை நினைத்தபடி முடிக்கலா மென்றும் இறுமாந்து கடைசியில் அழிகிருர்கள்.

பரீக்ஷகர்கள் மற்றப் படங்களைப்பார்த்துக்கொண்டே

போகும்போது அவைகள் ஒன்றும் திருப்திகரமாயிராம லிருப்பதுகண்டு "விஜயரங்கனுடைய படம் மாத்திரம் இப்படிக் கெடுக்கப்படாமலிருந்தால் அவனுக்குத்தான் பரிசுகிடைத்திருக்கும். இருந்தாலும் இப்போதிருக்கும் நிலைமையில் நாம் அவனுக்குப் பரிசுகொடுப்பதற்கில்லை" என்று வருத்தப்பட்டுக்கொண்டு போகும்போதே ஜய பாலனுடைய படம் அவர்களுடைய கண்களைக் கவர்ந்தது கண்டு களிப்புற்றனர். இந்தப்படம் எழுதினவனுக்கே பரிசு கொடுப்பதெனத் தீர்மானித்தார்கள்.

உடனே ஜயபாலனையழைத்து எல்லாருக்கும் முன் னிலையில் பரிசளித்தார்கள். கரகோஷங்களுக்கிடையே ஜயபாலன் பரீக்ஷகர்களுக்கு வந்தனமளித்துப் பரிசை வெகுமரியாதையுடன் பெற்றுக்கொண்டு பரீக்ஷாதிகாரி களைப்பார்த்து "பெருந்தகையரே! ஒரு விஞ்ஞாபனம், சற்றுத்தயை செய்யுமாறு வேண்டுகிறேனென்று சொல்லி வெகு விநயத்துடன் "இப்பரிசுக்கு நான் அருகனல்லன். இது விஜயரங்கனுக்குரியதேயாகும். அவன் தன்னுடைய படத்தை எழுதி முடிக்கும் தருணத்தில் நான் பார்த் தேன். அதியற்புதமாய் அமைந்திருந்தது. என் கண்க ளுக்கு ஓரற்புதக்காட்சியாகவே விளங்கியது. ஸ்ரீஜயந்தி யாகிய இன்றையதினம் அவன் எழுதிய அந்தப்படத்தைக் கண்ணுறும் கண்களே கண்கள் என்று ஆநந்தமடைந் தேன். என்கண்ணேறு பட்டதுபோலும். அவன் படத் தைக் கெடுத்தது யாரோ பொறாமையினால் செய்த செய்கையாகும். இப்பொழுதும் அந்தப்படத்தில் வர் ணங்கள் பட்ட இடங்கள்போக மற்ற இடங்களிலுள்ள அமைப்பைக் கவனித்தருளவேண்டும். அந்தப்படத்தில்

இப்போது கெடாமலிருக்கும் இரண்டு கண்களமைந்திருக்கும் அழகுக்கே என்ன பரிசு தந்தாலும் செல்லும். மேலும் விஜயரங்கனுடைய புகழ் உங்களுக்கும் உபாத்திமார்களுக்கும் நன்ருய்த்தெரிந்ததே. ஆகவே இவைகளை எல்லாம் உத்தேசித்து இப்பரிசை உங்களுடைய கையாலேயே அவனுக்கு அளிக்கவேண்டும். அவன் முன்னிலையில் நான் பரிசுபெற அநர்கன். இதுவே தெய்வ சம்மதமாகும், என்னை மன்னிக்கவேண்டும்'' என்று அக்கிராசனுதிபதியின் கையில் தான் பெற்ற பரிசைத்திருப்பிக் கொடுத்தான்.

அக்கிராசனுதிபதியும் மற்றுமுள்ளோ ரனைவரும் சிறுவனின் வாக்சாதுரியத்திற்கும், அவன் தாழ்மைக்கும், பெருந்தகைமைக்கும் மெச்சி அவன் சொல்வது சரியென்று ஒப்புக்கொண்டு விஜயரங்கனை யழைத்துத் தேறுதல் சொல்லி ஆசி கூறிப் பரிசை அவனுக்கு அளித்தார்கள். படம் எழுதிய தற்கான பரிசு விஜயரங்கனுக்குக் கொடுக்கப்படவே பரீக்ஷார்த்திகள் யோசித்து ஜயபாலனுடைய பெருந்தகைமைக்காக அவனுக்கும் ஒரு பரிசு அளித்து ஆசிகூறி மகிழ்ந்தார்கள். எல்லோரும் இதுவே தகும் தகும் என்று கரகோஷம் செய்தார்கள். சபையும் கலைந்தது.

விரோசனனே தனது சூழ்ச்சி பயனற்றுப்போகவே வெட்கி இஞ்சிதின்ற குரங்குபோல் விழித்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான்.

குழந்தைகளே ! பொருமையினுல் இழிவும், உழைப்பினுல் ஊதியமும், பெருந்தகைமையினுல் கௌரவமும் உண்டாகுமென்று இக்கதையால் தெரிந்துகொள்வீர்களாக.

# மூங்கிலின் மகத்துவம்.

ஒரு சிறைக்காரன் தன் சாமர்த்தியத்தைப்பின் வருமாறு கூறுகின்றான்.—

நான் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் மூங்கில் பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து முகங்கழுவி, மூங்கில் சீப்பினால் என் தலையைச் சீவிக்கொள்ளுகிறேன், என் குழந்தைகள் மூங்கில் தொட்டிலில் மூங்கில் பொம்மைகளோடு விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஆனந்திக்கிறேன். என் அழகான மூங்கில் வீட்டில், மூங்கில் கூரையின் கீழ் மூங்கில் நாற்காலியின்மேல் உட்கார்ந்து, மூங்கில் மேஜையினருகில், மூங்கில் மணையின் பேரில் என் கால்களைவைத்து, ஒரு கரத்தில் மூங்கில் கோப்பையும், மற்றோர் கரத்தில் மூங்கில் கரண்டிகளையும், பிடித்து மூங்கில் கட்டையால் சமைக்கப்பட்ட இள மூங்கில் கறியைச்சாப்பிடுகிறேன். பிறகு மூங்கில் துணியினால் துடைத்துக்கொண்டு, மூங்கில் விசிறியினால் விசிறிக்கொள்ளுகிறேன், மூங்கில் சுங்கானில் சுருட்டுப் பிடித்து, மூங்கில் பேனாவினால் மூங்கில் காகிதத்தின்மேலெழுதி, மூங்கில் கூடையில் வைத்து, அதையோர் மூங்கிற் கோலில்கட்டி எடுத்துக்கொண்டு, தலையில் மூங்கில் தொப்பியும் காலில் மூங்கில் பாதரக்ஷையும் தொடுத்து, மூங்கில் குடைபிடித்துப் போகிறேன்; மூங்கில் வாராவதியின் மூலமாய் ஆற்றைக்கடந்து, அந்தந்தநாள்பாடுகளையெல்லாம் முடித்துவிட்டு, மாலையில் என் மூங்கில் வீட்டுக்குத் திரும்பிவந்து, மூங்கில் களத்தின்மேல் வீற்றிருந்து மூங்கில் அரிசி அமுதுண்டு, மூங்கில் படுக்கையின்மேல் மூங்கில் தலையணையைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டு ஆயாசந்தீர அயர்ந்து நித்திரை செய்கிறேன்.

# 1. அறஞ்செய விரும்பு.

---

பிள்ளைகளே !

இராவணன் என்பவன் இலங்கை தேசத்து இராஜன். அவன் உலகத்தில் உள்ள எல்லோரையும் இம்சித்து வந்தவன். இந்த இம்சையைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் எல்லாம் மகாவிஷ்ணு இடத்திலேபோய் அழுதார்கள். அவர் "நான் இராமராய்ப்பிறந்து இராவணனைக் கொல்லுகிறேன்" என்றார்.

இந்த இராமர் தமது பெண்சாதி ஸீதையுடனும், தம்பி இலக்ஷ்மணனுடனும் காட்டில் வந்திருந்தார். ஸீதை அதிக அழகு உள்ளவள். இது இராவணனுக்குத் தெரிந்தது. அவன் அவள்மேல் ஆசைகொண்டான். இவர்களின் இருப்பிடம் தெரிந்து வந்தான். இராமரும் இலக்ஷ்மணரும் இல்லாத சமயத்திலே அங்கே போனான். ஸீதை குடிசையின் உள்ளே இருந்தாள். இராவணன் ஸந்நியாசி வேஷம் போட்டுக்கொண்டு வந்து பிச்சை கேட்டான். தருமம் செய்வது மேலானது என்று ஸீதைக்குத் தெரியும். உடனே அவள் வெளியேவந்து அவனுக்குப் பிச்சை யிட்டாள். அவள் அழகை நேரில் பார்த்த இராவணன், அதிக ஆசைகொண்டு ஸீதையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

இராமர், தம்பி இலக்ஷ்மணனுடனும், வேறு சிலருடனும் இராவணனது தேசமாகிய இலங்கைக்குப்போய் இராவணனைக்கொன்று ஸீதையைக் கூட்டிவந்தார். இரா

வணன் இறந்ததும் தேவர்கள் முதலிய எல்லோரும், அவனைக்கொன்ற இராமரைப் புகழ்ந்தார்கள். அதுமுதல் அவர்களுக்குப் பயம் என்பதே கிடையாது. சுகமே இருந்தார்கள்.

இந்தச்சுகம் இராவணன் இறந்ததாலல்லவா? இராவணன் இறந்தது ஸீதையைத் தூக்கியதாலல்லவா? ஸீதையைத் தூக்கியதும் அவளுடைய அழகினலல்லவா? அவளுடைய அழகும் பிச்சையிட வந்ததனலல்லவா தெரிந்தது? பிச்சையிட வெளியே வந்ததும் தருமம் தலைகாக்கும், அறம்செய விரும்பு, என்று பெரியோர்கள் சொல்லியதை

" மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம் "

என்று உணர்ந்ததனலல்லவா? இந்த எண்ணமே ஸீதைக்கு இராவணனல் ஒரு கெடுதியும் நேராமல் காத்தது! அன்றியும், ஸீதையால் நமக்குப் பயம் ஒழிந்தது என்று தேவர்கள் வாழ்த்தினர்கள்! ஆகையால் தருமம் செய்ய வேண்டும், தருமம் செய்யவேண்டும் என்று மனம்விரும்பினலே தருமம் செய்கிறோம். இல்லையேல் தருமம் செய்யாதொழிகிறோம். ஆகையால், தருமம் செய்வதற்குமுன், செய்யவேண்டுமென்று விரும்பவேண்டும். செய்ய வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டு விட்டால் செய்யாது ஒழிய மாட்டோம். ஆத்தி சூடியிலும் " அறம்செய விரும்பு '' என்றுதானே சொல்லியிருக்கிறது!

P. பரிமணப்பல்லவராயர், ஹெட்மாஸ்டர்,
போர்டுஸ்கூல், உத்தமசேரி,

# கீழ்மக்களின் குணம்.

கங்காநதியை அணைபோட்டு அடைத்து விடலாம். ஆனால் அவதூறு பேசுகிறவர்களுடைய வாயைக் கட்டுவதற்கு முடியாது.—

1. ஒருவன் தன் வீடுவாயில்களையும் மக்கள் மனைவிகளையுந் துறந்து காடே கதியாய்ச் சென்று ஈசுவரனை நோக்கித் தவம்புரிந்தால், அவதூறு பேசும் இழி குணத்தவர்கள், "பொருள்தேடிக் குடும்பத்தைக் காப்பதற்குச் சக்தியில்லாத சோம்பேறி பிசாசுபோல் காட்டில் கிடந்து காலங்கழிக்கிறான்" என்று கூறுவார்கள்.

2. ஒருவன் சந்தோஷமாய்க் கொண்டாட்டங்களிலும் திருவிழாக்களிலும் விருப்ப முடையவனாய்க் கவலையற்றிருப்பானானால், அவனைப்பார்த்து, "வேதனை விசாரமற்ற சுகபுருஷன்! தன் வயிறுதாழி தாயார் வேண்டாம் தகப்பனார் வேண்டாம் என்கிற கதையாய் அலைகிறான். தானே ராஜா! தன் மனமே மந்திரி" என்று கூறுவார்கள்.

3. பணக்காரர்களோ வென்றால் அவர்கள் வாயில் விழுந்து வெளிவராத நிமிஷமேயிராது.

4. பரம ஏழையாயிருந்து மெய்வருந்த உழைத்துப் பொருள்தேடி வாழ்ந்து வந்தால் அவனைப்பார்த்து, அதிர்ஷ்டமில்லாதவன், முற்பிறப்பில் ஈயாததோஷ மிதெல்லாம்-என்று கூறுவார்கள்.

5. டம்பத்தில் விருப்பமுடைய ஒரு பிரபு தெருவோடு

நல்ல ஆடை உடுத்துச் செல்வானாகில் அவனைப்பார்த்து "இவன் வாழ்வு எத்தனை நாளைக்கு. முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை, முப்பது வருஷம் தாழ்ந்தவனுமில்லை. ஒருமாதத்தில் நிலா நாள் பாதி இருட்டுநாள் பாதி--என்பது இவனுக்குத்தெரிந்தால் இப்படி நடப்பானா" என்பார்கள்.

6. சாதாரணமான ஒரு மனிதன் நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டால் அவனைப்பார்த்து, "இந்தக்காலத்தில் அற்பர்களுக்குத்தான் வாழ்வு!" என்று கூறுவார்கள்.

7. எந்த வேலை வந்தாலும் நான் செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டு சோம்பலின்றிப் பொழுதுக்கும் வேலை செய்தால் அவனைப்பார்த்து "காசாசை யல்லவா இவனை இப்படியாட்டுகிறது. காசாசைகொண்டால் அப்பால் உடம்பைக் கவனிப்பதேது?" என்று கூறுவார்கள்.

8. ஒருவன் வாய்கூசாமல் பேசுவானானால், அவனைப்பார்த்து, "சை, சள! சள! என்று எப்போது பார்த்தாலும் கத்துகிறான் மகாப் பிராக்ஞனைப்போல்! மண்டூகம்!" என்று கூறுவார்கள்.

9. ஒருவன் அதிகமாய்ப் பேசாமல் தன் வேலையை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தால் அவனைப் பார்த்து, "எப்பொழுது பார்த்தாலும் பேசாமடைந்தைபோலிருந்து கழுத்தை அறுக்கிறான்! பேசினால் வாய்முத்து உதிர்ந்துபோய்விடும்போலிருக்கிறது. பிடாரிகோவில் சிலைதான் இவன்" என்று சொல்லுவார்கள்.

10. ஒருவன் பிறர் வழிக்குப் போகாமல் தன்னை எவரேனும் வைதாலும் அதைக் கவனியாமலிருந்தால், அவனைப்பார்த்து, "பயங்காளிப்பயல்! பெண்பிள்ளை! ஆண் பிள்ளையானால் இப்படியிருப்பானா?" என்று கூறுவார்கள்.

11. ஒருவன் மிகுந்த பலசாலியாயிருந்து தன் வழிக்கு வருகிறவர்களை எதிர்த்துக்கொண்டு அடித்தால், "சை! இவன் பைத்தியம் பிடித்தவன்" என்று சொல்லிக் கொண்டு ஓடிப்போவார்கள்.

12. செட்டாய்ச் செலவிடுகிறவனைக் கண்டால், 'தன் வயிற்றுக்குக்கூடச் சாப்பிடாமல் யாருக்காகப் பணத்தை இப்படிச் சேர்த்துவைக்கிறானோ தெரியவில்லை இந்த லோபி" என்று சொல்லுவார்கள்.

13. நன்றாகச் செலவுசெய்து நல்ல சாப்பாடு சாப்பிட்டால், "இவனெங்கிருந்தோ வந்துசேர்ந்தான் குடியைக் கெடுக்க! பெரிய ஊதாரி" என்பார்கள்.

இவ்வாறாக எல்லோரையும் பழிப்பதே அவர்களுடைய தொழிலாயிருக்கும். ஆதலால் அப்படிப்பட்ட குணமுடையவர்களுடைய பேச்சை நம்புவது கூடாது. அவர்களுடன் பழகுவதும் அவர்களோடிருப்பதுவுங் கூடாது. அவர்கள் பிறரைப்பற்றி ஏதேனும் பேசினால் கேட்டுக்கொண்டே பதிற்பேசாமலும் அவர்கள் முன் நிற்காமலும் நல்லபடியாகவே நடந்துவிடவேண்டும்.

---

## பத்து சிறந்த கொள்கைகள்

---

### கடவுள்

1. எல்லா உலகின் இறைவன் ஒன்றே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

### நன்மை

2. நலம்நாடி நலம்பேசி நலம் செய்யும் நல்லினர்க்கு
உளதாகும் எல்லா உயர்வும்.

### உண்மை

3. புறத்தூய்மை செய்யும் புனல்போல உண்மை
மனத்தூய்மை ஆக்கும் மருந்து

### தூய்மை

4. காமம் வெகுளி மயக்கம் கொள்ளாதமனம்
† தாமம் இறையே தனக்கு.

### அன்பு

5. அற்பம் பெரிதென்று எண்ணாது அன்புசெயும்
நுட்ப அறிவோனே நோன்புடையன்.

---

† மாலை.

வினைத்தூய்மை

6. வினைத் தூய்மை வாய்மை விளைவிக்கும்
நனிச் செல்வம் வாழ்க்கைநலம்.

பிழை

7. தன்பிழை தான்திருத்திப் பிறர் பொறுத்தானை
அன்பு அடிவணங்கு மாம்

தொண்டு

8. *நினை மனதி லூன்றி நீளுலகமுய்யும்
தனைமறந்த தொண்டே துறவு.

இன்னாசெய்யாமை

9. இன்னாத செய்யாமை என்னும் ஒழுக்கத்தில்
மன்னுயிர்க் கெல்லாம் மறை.

கருமயோகம்

10. தேவர் நரகரும் தாம்செய்யும் கருமத்தால்
ஆவர் மற்றெவ்வாற்றான் இல்.

ஜே. வேங்கிட சுப்ரமண்ய பாரதி, தேவகோட்டை.

* ஈசனை.

---

## வாழ்த்துக்கவி

---

நண்பீர் நமது நற்றவப் பயனும்
பண்பார் நறுந்தமிழ்ப் பாலவி நோதினி
எழுத்தெனுங் கண்மல ரெழிலுற மலர்த்தி
வழுத்துசொல் லாகு மலர்முகம் விளங்க
பொருணணி காட்டிப் புன்னகை பூத்துத்
திருமக ளனையார் செங்கைமா மலரினும்
செவ்வே ளனையார் செழுங்கரப் போதினும்
பொருந்திற லின்பம் பூப்பது தெரிப்பான்
விருந்தென வந்து மிளிர்ந்த தச்செல்வம்
கண்டனன் மகிழ்ந்தேன் கருணையங் கடலே
தண்டமிழ் மொழியால் தமியனேன் வாழ்த்தி
பாலவி நோதினி பன்னெடுங் காலம்
நீடு வாழ நினைக்கின் றேனே.

கா. சி. சிவசங்கரப் பண்டிதர், நெல்லிகுப்பம்.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

18645 7

# AYURVEDIC
# EYE TREATMENT

OF

## Mr. T. S. AMIRTHALINGAM PILLAI
### OF TANJORE NOW IN MADRAS.

---

## SELECT OPINION

***Mr. K. Sundaresa Ayyar, House Agent, Building Contractor and Municipal Councillor, Kodaikanal Hills, Madura (Dist.)*** :—Mr. T. S. Amirthalingam Pillay who was introduced to me by Mr. T. Marimuthu Pillay B. A. Supdt. of Post Offices Madura Division, Madura, is known to me as Oculist. I was under his treatment for a short time. The Thailam for bath and (தளம்) Thalam for the feet- gave me complete relief. I could not read nor see things. I tried my best in different places with the help of the English Doctors who are even now considered to be best Opthalmic Surgeons. They could not help me a bit though I submitted myself to their treatment for a number of days in Madura, Tirupattur, Tanjore and Madras. I could not explain myself better in expression the real appreciation and the thorough satisfaction I have in having got a radical cure. My case is very complicated. Nobody is able to find out the cause of it I am extremely pleased to express my honest opinion of safe and sure remedy by Indian treatment by Indian Drugs. I would therefore take this opportunity of recommending this able gentleman for a safe handling of any disease concerning eyes which are the most important functions of the body. (1st July 1922.)

---

**Patients will be attended to by Mr. T. S. A. Pillai from 7 to 9 A. M. and 4 to 6 P. M.**

---

*For further particulars please apply to :—*

***DR. V. R. SUNDARAM,***
***Ayurveda Vaidya Mandiram,***
*No. 268, Pycroft's Road, Rayapettah, Madras.*

# சில அருமையான புத்தகங்கள்

பாலவிநோதினி ஆசிரியர்
வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியவர்கள்
இயற்றியவை.

| | | |
|---|---|---|
| இராமாயண இரகசியம் :—சித்திரப்படங்களுடன் கூடியது ... ... ... | 0 | 10 |
| (பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம்) ... | 0 | 8 |
| ஜடாவல்லவர் :—பெரிய புதிய பதிப்பு ... | 2 | 8 |
| விஜயபாஸ்கரன் :—அல்லது ஒரு குற்றத்திற்கு ஒன்பது குற்றம் ... ... ... | 2 | 0 |
| ஒளவை அருந்தமிழ் :—வெகு அருமையான நூல்—தமிழ்மக்கள் ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்க வேண்டியது. ... ... | 0 | 12 |
| கஜேந்திரமோக்ஷம், கண்ணப்பன் :—பக்திப்பிரபாவம் ததும்பியுள்ளது ... ... | 0 | 4 |
| அநந்தராமாயண வசனம் ... ... | 5 | 0 |
| தத்துவசங்கிரஹ ராமாயண வசனம் ... | 3 | 8 |
| பாண்டவர்களின் பாலலீலை ... ... | 0 | 10 |
| பாண்டவர் வனவாசம் ... ... | 0 | 12 |
| வள்ளிநாயகி ஒரு சிறந்த நாடகம் ... ... | 0 | 12 |
| சுந்தரகாண்டம் ௸ ... ... | 0 | 12 |

## புதிதாய் வெளிவந்துள்ள இனிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்னபுரி ரகசியம் 2-பாகமும் | 4 | 0 | அருச்சுன சந்நியாசி | 0 | 12 |
| கஜபதி துப்பறியும் நாவல் ... | 0 | 10 | தனபாக்யம் ... | 2 | 0 |
| திகம்பரசாமியார் 2-பாகமும் | 3 | 0 | வசீகரி ... | 1 | 12 |
| ஷண்முகசுந்தரம் ... | 2 | 0 | வஸுமதி ... | 1 | 8 |
| விக்ரமசிங்கன் கோட்டை ... | 1 | 0 | தாமரைவதனி ... | 1 | 4 |
| மதனகல்யாணி 1, 2, 3 பாகம் | 4 | 8 | கிருஷ்ணகுமாரி ... | 0 | 12 |

**சுப்ரமண்யர் தோத்திரக்கொத்து ... 0 4**

---

விலாசம் :—மானேஜர், பாலவிநோதினி ஆபீசு,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.